DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 57 /2021

Deposition of Witness : DW2

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபாகரன் | Father's/Husband's Name : | செல்வம் |
| Village | : கடமலைக்குண்டு | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.04.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வழக்கு சொத்தின் எண், விஸ்தீரணம் எனக்கு ஞாகம் இல்லை. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 3ம் பிரதிவாதியின் இடத்தை வாதி தனது இடம்ள ன்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு விபரங்கள் எனக்கு எனது அப்பா சொன்னதின் பேரில் தான் தெரியும். எனது அப்பா 10-15 வருடங்களுக்கு முன்பு அந்த விபரங்களை எனக்கு சொன்னார், எனது அப்பா உயிருடன் தான் இருக்கிறார். தாவா சொத்து ஆதியில் முத்தையாவின் அப்பா வீரணனுக்கு பூர்வீக பாத்தியப்பட்டது. வீரணனுக்கு தாவா சொத்தை தவிர்த்து வேறு சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வீரணனுக்கு எத்தனை வாரிசுகள் என்று கேட்டால் எனக்கு தெரிந்து முத்தையா மற்றும் பெருமாள் மட்டும் தான்.

2) எனது நிரூபண வாக்குமூலத்தில் வீரணனின் சொத்துக்களை பொறுத்து அவரது வாரிசுக் ளபாகம் பிரித்து கொண்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான், எந்த ஆண்டு பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்து 10-20 வருடங்களுக்கு முன்பு பாகம் பிரித்து கொண்டார்கள். அந்த பாக விஸ்தி பத்திரத்தை நான் பார்த்ததில்லை. தாவா சொத்து வாதிக்கு கிரைய பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றாலும் 3ம்பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியும் அவரது முன் பாத்தியஸ்தர்களும் தாவா சொ்த்தை சுமார் 20 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, முருகேஸ்வரி தான் அனுபவத்தில் இருக்கிறார்.

3) தாவா சொத்து முருகேஸ்வரியின் அனுபவத்தில் இல்லை என்றாலும் அவர் கேட்டுக் கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவம் செய்கிறார் என்பதற்கு வீட்டு வரி இரசீது, மின் கட்டண இரசீது போன்ற ஆவணம் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். தாவா சொத்தை முருகேஸ்வரி 1985ம் ஆண்டு சொசைட்டியில் அடமானம் வைத்து கடன் வாங்கியிருக்கிறார். மேற்படி அடமான பத்திரத்தில் எவ்வளவு விஸ்தீரண நிலம் காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அடமான பத்திரத்தில் இருக்கும் சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. முருகேஸ்வரி தாவா சொத்தில் பெட்டி கடை வைத்து நடத்தி வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யான விபரங்களை கூறி சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 22.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.04.22 16:29:50 +0530

District Munsif,
Aundipatti.